-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

சிறீலங்கா இன்வெஸ்ட்மென் ஹோல்டிங் லிமிட்டெட்டின் “(கம்பனி” ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயங்களை வலியுறுத்தல்**

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.8 இற்கு கவனத்தை ஈர்க்கின்றேன். 2020 மே 28 இல் நடைபெற்ற சபை கூட்டத்தில் கம்பனியின் பணிப்பாளர் சபை மற்றும் சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெட் மற்றும் வரையறுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது துணைநிலைக் கம்பனி முழுமையாக உடமையாக்கிய சிறீலங்கா இன்வெஸ்ட்மன்ட் ஹோல்டிங் லிமிட்டெட் கணக்கொழிப்பதற்கு தீர்மானித்தது. 2023 மே 10 இல் நடைபெற்ற சபை கூட்டத்தில் வரையறுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது மீளமைக்க பணிப்பாளர் சபை தீர்மானத்திருந்த போதிலும் 2007 இல் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 394 ஆம் பிரிவின் பிரகாரம் சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெட் சொத்துக்களை அறவிடவும் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்யவும் சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெ பதிவழிப்பிற்காக தீர்மானம் தொடரப்படும்.

மேலும் 2025 ஏப்ரல் 23 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்திற்கு பின்னர், கம்பனி பதிவேடு சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெட்டை பிரமாணப்படுத்தியவுடன் கம்பனியை கலைக்க வேண்டுமா அல்லது மீளச் செயற்படுத்தப்பட வேண்டுமா எனவும் ஆலோசனை மற்றும் திறைசேரி செயலாளரின் அறிவுறுத்தல்கள் மீது தீர்மானம் எடுப்பதற்கு சபை குறிப்பிட்டது.

கம்பனியின் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறு சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெட்டின் நிதிக்கூற்றுக்கள் கலைத்தல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் என்னுடைய அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 87,970 தொகையான நட்டமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 69,969 தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 18,001 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. ரூபா 87,970 ஆல் நிர்வாகச் செலவினம் அதிகரித்தமையே வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| அ | பின்வரும் கட்டாய நோக்கங்கள் சங்கத்தின் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அத்தகைய நோக்கங்களை அடைவதற்கு கம்பனியால் எவ்வித செயற்பாடுகளையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.<br>• புதிய முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் பிணைங்களை முதலீடு செய்தல் உள்ளடங்க முதலீட்டு மற்றும் ஹோல்டிங் கம்பனியில் முதலீட்டை மேற்கொள்வதற்கு<br>• கம்பனி நிதியை இதன் சொந்த வியாபார துணைநிலை மற்றும் இணைந்த நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் விரிவாக்கலிற்கு பயன்படுத்தல்.<br>• கம்பனி நோக்கங்களிற்காக தேவையான ஆதனங்கள், உரிமைகள் மற்றும் வியாபாரங்களை கொள்வனவு, குத்தகை, முகாமை, விற்பனை அல்லது கைதவிர்ப்புகளிற்கு.<br>• ஏனைய கம்பனிகளிற்கு நிதியளித்தல், மறுசீரமைத்தல் அல்லது முகாமைத்துவ உதவி வழங்குவதற்கு.<br>• பங்குகள், கடன் பத்திரங்கள் அல்லது ஏதவது பிணையங்கள் காப்பீடு செய்தல், வழங்கல் அல்லது கையாளுதல்<br>• அறிவுரை, ஆலோசனை, தரகு மற்றும் முகவர் சேவைகளை வழங்குவதற்கு.<br>• கடன் வழங்குதல், கடன் கொடுத்தல், ஈடுவைத்தல் அல்லது பிணை நிதிகள் மற்றும் பேரம்பேசலிற்குட்பட்டு கருவிகளை | சிறீலங்கா இன்வெஸ்ட்மென் ஹோல்டிங் லிமிட்டெட்டின கணக்கொழிப்பு தொடர்பான நிதி தீர்மானம் இன்னமும் அடையப்பட்டிருக்கவில்லை.<br>நிதிக்கூற்றக்கள் 2020 மே 28 இல் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்திற்கு அமைய கணக்கொழிப் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பகுதி மீளாய்வின் கீழ் இருந்தது.<br>. | சிறீலங்கா இன்வெஸ்ட்மன் கோல்டிங் லிமிட்டெட்டின (SLIHL) தற்போதைய நிலையின் அடிப்படையில் கணக்கொழிப்பு செயற்பாடுகளை தொடருவதற்கு முன்னர் அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.10 ஆம் பிரிவிற்கமைய அமைச்சரவையில் இருந்து அனுமதி வேண்டப்பட்டதை தொடர்ந்து சபை முறையாக பரிந்துரைத்துள்ளது. |

வழங்குவதற்கு

- ஏனைய வியாபாரங்களுடன் பங்குடமை, கூட்டு முயற்சிகள் அல்லது இலாப பங்கீடு ஏற்பாடுகளில் ஈடுபடுதல்.
- ஊழியர்களிற்கு ஓய்வூதியங்கள், பணிக்கொடை மற்றும் நலன்புரிச் சலுகைகள் வழங்குதல் மற்றும் உதவிநிலை நிறுவனங்களை அதிகரித்தல்.
- அரசாங்கம் அல்லது அரச அதிகாரிகளுடைய ஒப்பந்தம் கைசாத்திடுவதற்கும் உரிமைகளை பெறுவதற்கும்.
- கம்பனியின் வியாபார முன்னேற்றம் மற்றும் விளம்பரம் மற்றும் சந்தை நிலையை கட்டியொழுப்புதல்.
- மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு தேவையான சகல தற்செயலான அல்லது மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு.

2023 மே 10 இல் பணிப்பாளர் சபை பிரித்தல் நோக்கத்திற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பொது லிமிட்டெட் புதுப்பிப்பதற்கு தீர்மானித்தது. அதேநேரம் சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெட் கலைத்தல் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 394 ஆம் பிரிவிற்கமைய தொடர வேண்டியிருந்தது.

மேலும் கம்பனி பதிவாளர் சிறீலங்கா இன்வெஸ்ட்மன் ஹோல்டிங் லிமிட்டெட்டை பிரமாணப்படுத்தியவுடன் திறைசேரி செயலாளரின் அறிவுறுத்தலில் கம்பனியை முடிவுறுத்தி கலைப்பதற்கு அல்லது மீள செயற்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென சபை தீர்மானித்தது என கவனிக்கப்பட்டது.

அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.10 ஆம் பிரிவின் பிரகாரம் SOE இன் கலைப்பு அமைச்சரவையின் அனுமதியில் மாத்திரம் தொடங்கப்பட முடியும். சபையானது கலைத்தல் அடிப்பயைில்

நிதிக்கூற்றுக்களை தயாரித்திருந்த போதிலும் அமைச்சரவையின் அனுமதி பெறுவதற்காக வேண்டப்பட்ட நடவடிக்கைகள் இன்னமும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.